**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (ஒபக) மாவட்டத் திட்ட அலுவலகம் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

ந.க.எண்.1401/DC5/IE /ஒபக/2023 நாள்: 04.10.2023

**பொருள்** : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் - உள்ளடக்கிய கல்வி திட்டம் - 2023-24ம் கல்வியாண்டு - மாற்றுத்திறன் கொண்ட மாணவ மாணவியர்களுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் - சம்பந்தப்பட்ட வட்டார வளமையங்களுக்கு நிதி விடுவித்தல், மருத்துவ முகாம் நடைபெறும் நாட்கள், இடங்களின் விவரம் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் - சார்பு.

**பார்வை** :

1. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.2431/B8/IE/SS/2023, நாள்:02.09.2023.
2. மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் அவர்களின் ந.க.எண்.2042/மா.ந.அ/2023, நாள்:21.07.2023.
3. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் ந.க.எண்.1401/DC5/IE /ஒபக/2023 நாள்: 29.09.2023

*******

2023-24ம் கல்வியாண்டிற்கான ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உள்ளடக்கிய கல்வித் திட்டக் கூறின்கீழ் பிறப்பு முதல் 18 வயது வரையிலான மாற்றுத்திறன் கொண்ட மாணவ மாணவியர்களுக்கு முன் தொடக்கநிலை, தொடக்கநிலை மற்றும் இடைநிலையில் பல்வேறு செயல்பாடுகள் நடைபெற்று வருகிறது. பார்வை 1ல் காணும் சென்னை மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி மாற்றுத்திறனாளிகள் நலத்துறையுடன் இணைந்து Gap Identification of Oos CWSN சார்ந்து மருத்துவ மதிப்பீட்டு முகாம் வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 8 வட்டார வளமையங்களில் இணைப்பில் உள்ள நாட்களில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி மாநிலத் திட்ட அலுவலகத்திலிருந்து மருத்துவ மதிப்பீட்டு முகாமிற்கான செலவினமாக ஒரு வட்டார வளமையத்திற்கு ரூ.10000/- வீதம் 8 வட்டார வளமையங்களுக்கு சேர்த்து மொத்தம் ரூ.80,000/- நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**மருத்துவ மதிப்பீட்டு முகாமில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் :**

1. இம்மருத்துவ மதிப்பீட்டு முகாமில் பிறப்பு முதல் 18 வயது வரையுள்ள மருத்துவ மதிப்பீடு மற்றும் மருத்துவ ஆலோசனை மாற்றுத்திறன் மாணவ மாணவிகள் அனைவரும் எவ்வித விடுதலுமின்றி கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. மருத்துவ முகாமில் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மருத்துவ மதிப்பீடு, மாற்றுத்திறன் சான்றிதழ் புதுப்பித்தல் மற்றும் புதிய சான்றிதழ் வழங்குதல், தேசிய அடையாளஅட்டை (NID), தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (UDID), இரயில் மற்றும் பேருந்து பயணச் சலுகை, உதவி உபகரணங்களுக்கான பதிவு, உதவித் தொகைக்கான பதிவு, முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சைக்கான பதிவு போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளது.
3. இம்முகாமில் கலந்து கொண்டு தங்களுக்கு தேவைப்படும் சேவைகளைப் பெற பயனாளிகளுக்கு தகவல் தெரிவித்திடவும், எந்த வகையான சேவைகள் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு தேவை என்பதை மருத்துவ முகாமிற்கு முன்னரே பட்டியலாக தயாரித்து வைத்துக் கொள்ளவும் அனைத்து சிறப்பாசிரியர்கள், இயன்முறை மருத்துவர்கள் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. உள்ளடக்கிய கல்விக்கென வட்டார அளவிலான குழு (BLC- Block Level Committee) ஏற்கனவே 2022-2023 நிதியாண்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் உள்ள வட்டாரக் கல்வி அலுவலர், வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ), வட்டார உள்ளடக்கிய கல்வித் திட்டக் கூறு ஒருங்கிணைப்பாளர், ஒரு மூத்த சிறப்பு பயிற்றுநர், ஒரு இயன்முறை மருத்துவர் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டிய மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் பெயர்ப்பட்டியல் இறுதி செய்து மருத்துவ முகாமிற்கு தவறாமல் வரவழைத்தல் வேண்டும். இக்குழுவின் செயல்பாடுகளை பதிவேடுகளில் பராமரிக்க வேண்டும்.

5. கூடுதலாக புதியதாக கண்டறியப்பட்ட மற்றும் பள்ளி செல்லா மாற்றுத்திறன் மாணவ மாணவியர் அனைவரும் இம்முகாமில் விடுபடாமல் கலந்து கொண்டு சேவைகளைப் பெறுவதை உறுதி செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6.இம்முகாம் நடைபெறும் தகவலை செய்தித்தாள், உள்ளூர் தொலைக்காட்சி, சுவரொட்டிகள், பதாகைகள் ஆகியவற்றை மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பேருந்து நிலையம் போன்ற மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் வைக்க வேண்டும்.

7. மருத்துவ முகாம் நடைபெற இருக்கும் இடத்தினை மருத்துவ முகாமிற்கு ஒரு நாளுக்கு முன்பாக சென்று பார்வையிட்டு இடவசதி, வகுப்பறை சுத்தம் பள்ளி வளாகம் இருக்கைகள் வசதி, பந்தல் கழிவறை சுத்தம் மற்றும் இதர ஏற்பாடுகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு தகவல் வழங்க வேண்டும்.

8. முகாமில் கலந்து கொள்ள வேண்டிய மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் பயிலும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தகவல் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

9. முகாம் நடைபெற உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு முன்னதாக தகவல் தெரிவித்து தேவையான முன் ஏற்பாடுகள் முழுமையாக செய்யவும், பள்ளி வளாகத்தினை தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தப்படுத்த ஒத்துழைப்பு நல்க வேண்டும். மேலும் முகாமிற்கு தேவையான வகுப்பறை வசதிகள், மின்சாரம் மற்றும் கழிவறைகள் முழுமையாக சுத்தப்படுத்தி முகாமில் பயன்படுத்தி கொள்ள ஏற்பாடுகள் செய்து தர வேண்டும். மேலும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் முகாமிற்கு எவ்வித சிரமுமின்றி வந்து செல்ல Ramp வசதியுள்ள வகுப்பறைகள் மற்றும் தரைதளத்தில் உள்ள வகுப்பறைகளை தேர்ந்தெடுத்து வழங்க வேண்டும்.

10. முகாம் நடைபெறும் நாளன்று எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் அனைத்து பணியாளர்களும் குழுவாக பணியாற்றி இம்முகாம்களை செம்மையான / சிறப்பான முறையில் நடத்தி முடிக்க வேண்டும்.

11. பிறப்பு முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் முழுமையாக செய்திருக்க வேண்டும்.

12. மாவட்ட அலுவலர்கள் முகாமை பார்வையிடும் போது, முகாமில் கலந்து கொள்பவர்களுக்கு செம்மையான முறையில் ஏற்பாடுகளை செய்திருப்பதை பாராட்டும் வகையில் அமைத்து கொள்ள வேண்டும்.

13. முகாம் முடிந்த பிறகு சார்ந்த Block Level Committee முகாமில் கலந்து கொண்டவர்கள், பிரிவு வாரியான எண்ணிக்கையை மாவட்ட அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

14. இம்முகாமின் செலவினங்களுக்கான நிதி (பதாகைகள் அச்சிடுதல் (Banner), சுவரொட்டிகள் அச்சிடுதல் (Wall Posters), மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர் அல்லது

பாதுகாவலருக்கான போக்குவரத்து செலவினம், தேநீர் மற்றும் சிற்றுண்டி செலவினம், உணவு மற்றும் இதர செலவினங்கள்) வட்டார வளமையத்திற்கு ரூ.10000/- வீதம் 8 வட்டார வளமையங்களுக்கு ரூ.80,000/- (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) Gap Identification of Oos CwSN at the Elementary Level என்ற தலைப்பின் கீழ் கீழ்க்கண்டவாறு சம்பந்தப்பட்ட வட்டார வளமையங்களின் SNA வங்கிக் கணக்கிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வட்டார வளமையத்தின் பெயர் | விடுவிக்கப்படும் தொகை |
|---|---|---|
| 1. | Anaicut | ரூ.10000/- |
| 2. | Gudiyatham | ரூ.10000/- |
| 3. | K.V. Kuppam | ரூ.10000/- |
| 4. | Kaniyambadi | ரூ.10000/- |
| 5. | Katpadi | ரூ.10000/- |
| 6. | Pernambut | ரூ.10000/- |
| 7. | Vellore Rural | ரூ.10000/- |
| 8. | Vellore Urban | ரூ.10000/- |
| மொத்தம் | | ரூ.80,000/- |

மேற்கண்ட செயல்பாடுகள் முழுமையாக எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் மேற்கொள்ளவும் பார்வை (1)–ல் கண்ட மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அச்செயல்முறைகளில் உள்ளபடி செலவினங்கள் மேற்கொள்ளவும் உரிய பற்றுச்சீட்டுகளை வட்டார அளவில் பராமரிக்கவும். தணிக்கையின் போது முன்னிலைப்படுத்தவும் வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : 1. மருத்துவ மதிப்பீட்டு முகாம்கள் நடைபெறும் நாள் மற்றும் இடங்களின் பட்டியல்
2. மருத்துவ முகாம் நடைபெறும் நாளில் ஒன்றிய அளவில் கலந்து கொள்ள வேண்டிய ஒன்றியங்களின் விவரங்கள்.
3. UDID Registration work allotment
4. Model Banner & Posters from State Office.

கூடுதல்முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

பெறுநர் :1. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ), வேலூர் மாவட்டம்
3. முகாம் நடைபெறவிருக்கும் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்

நகல்:
1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர்
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர்

## இணைப்பு –1

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம்**

**2023–2024**

**0 – 18 வயதுடைய மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் உத்தேச அட்டவணை**

| வ.எண். | ஒன்றியம் | மருத்துவ முகாம் நடைபெறும் நாள் | இடம் |
|---|---|---|---|
| 1 | வேலூர் நகரம் | 06.10.2023 (வெள்ளிக்கிழமை) | அ.முஸ்லீம்.மே.நி.பள்ளி, வேலூர். |
| 2 | கணியம்பாடி | 11.10.2023 (புதன்கிழமை) | அ.மே.நி.பள்ளி, கணியம்பாடி |
| 3 | காட்பாடி | 12.10.2023 (வியாழக்கிழமை) | அ.ஆ.மே.நி.பள்ளி, காட்பாடி |
| 4 | பேர்ணாம்பட்டு | 13.10.2023 (வெள்ளிக்கிழமை) | கன்கார்டியா உ.நி.பள்ளி, பேர்ணாம்பட்டு |
| 5 | அணைக்கட்டு | 18.10.2023 (புதன்கிழமை) | அ.ஆ.மே.நி.பள்ளி, அணைக்கட்டு |
| 6 | வேலூர் புறநகர் | 19.10.2023 (வியாழக்கிழமை) | ஊ.ஒ.ந.நி.பள்ளி, தொரப்பாடி |
| 7 | கே.வி.குப்பம் | 20.10.2023 (வெள்ளிக்கிழமை) | அ.ஆ.மே.நி.பள்ளி, கே.வி.குப்பம் |
| 8 | குடியாத்தம் | 25.10.2023 (புதன்கிழமை) | அ.நகராட்சி.மே.நி.பள்ளி, குடியாத்தம் |

இணைப்பு –2

| Sl.No | Date | Name of the Block | Name of the Block allotted for Medical Camp (Sup(I/C), BRTEs / Special Educators) | No. of participants | Total |
|---|---|---|---|---|---|
| 1 | 06.10.2023 | Vellore Urban | Vellore Urban Sup (I/c) & All BRTEs | 4 | 21 |
| | | | Vellore Urban (Spl Educators & Therapist) | 7 | |
| | | | Vellore Rural (Spl Educators & Therapist) | 5 | |
| | | | Kaniyambadi (Spl Educators & Therapist) | 5 | |
| 2 | 25.10.2023 | Gudiyatham | Gudiyatham Sup (I/c) & All BRTEs | 10 | 23 |
| | | | Gudiyatham (Spl Educators & Therapist) | 3 | |
| | | | Anaicut (Spl Educators & Therapist) | 4 | |
| | | | Katpadi (Spl Educators & Therapist) | 6 | |
| 3 | 13.10.2023 | Pernambut | Pernambut Sup (I/c) & All BRTEs | 3 | 14 |
| | | | Pernambut (Spl Educators & Therapist) | 4 | |
| | | | Gudiyatham (Spl Educators & Therapist) | 3 | |
| | | | Anaicut (Spl Educators & Therapist) | 4 | |
| 4 | 20.10.2023 | K.V.Kuppam | K.V.Kuppam Sup (I/c) & All BRTEs | 8 | 22 |
| | | | K.V.Kuppam (Spl Educators & Therapist) | 4 | |
| | | | Katpadi (Spl Educators & Therapist) | 6 | |
| | | | Pernambut (Spl Educators & Therapist) | 4 | |
| 5 | 12.10.2023 | Katpadi | Katpadi Sup (I/c) & All BRTEs | 8 | 22 |
| | | | Katpadi (Spl Educators & Therapist) | 6 | |
| | | | K.V.Kuppam (Spl Educators & Therapist) | 4 | |
| | | | Pernambut (Spl Educators & Therapist) | 4 | |
| 6 | 11.10.2023 | Kaniyambadi | Kaniyambadi Sup (I/c) & All BRTEs | 4 | 20 |
| | | | Kaniyambadi (Spl Educators & Therapist) | 5 | |
| | | | Vellore Rural (Spl Educators & Therapist) | 5 | |
| | | | Vellore Urban (Spl Educators & Therapist) | 6 | |
| 7 | 19.10.2023 | Vellore Rural | Vellore Rural Sup (I/c) & All BRTEs | 6 | 23 |
| | | | Vellore Rural (Spl Educators & Therapist) | 5 | |
| | | | Vellore Urban (Spl Educators & Therapist) | 7 | |
| | | | Kaniyambadi (Spl Educators & Therapist) | 5 | |
| 8 | 18.10.2023 | Anaicut | Anaicut Sup (I/c) & All BRTEs | 12 | 23 |
| | | | Anaicut (Spl Educators & Therapist) | 4 | |
| | | | Gudiyatham (Spl Educators & Therapist) | 3 | |
| | | | K.V.Kuppam (Spl Educators & Therapist) | 4 | |

இணைப்பு–3

| UDID REGISTRATION WORK ALLOTMENT | | | |
|---|---|---|---|
| S.NO | NAME OF THE BLOCK | NAME OF THE BRTE | NAME OF THE SPL EDUCATOR |
| 1 | VELLORE URBAN | E. MARI | P. SUDHA |
| 2 | GUDIYATHAM | D.GNANAVEL | Z. SALEEM |
| | | E. ANANDHI | |
| 3 | PERNAMBUT | C. NAGARAJ | D. JOHN JULIAN |
| 4 | K.V.KUPPAM | G. VADIVELU | Z. SALEEM |
| 5 | KATPADI | S. RAMESHKUMAR | Z. SALEEM |
| | | S. SRIDHAR | |
| 6 | KANIYAMABDI | E.V. PARTHEEBAN | P. GEETHA |
| 7 | VELLORE RURAL | G. LAKSHMI. | P. SUDHA |
| 8 | ANAICUT | S. JOTHIBASS | D. JOHN JULIAN |
| | | P. MANIVANNAN | |